## உளூ செய்து முடித்தபின் ஓதவேண்டிய துஆ

உளூ செய்யத் துவங்குவதற்கு முன்பாக பிஸ்மில்லாஹ் ஓதவேண்டும். (திர்மிதி).

நல்லவிதமாக உளூ செய்து முடித்துவிட்டபின் கீழ்க்காணும் துஆவை ஓத வேண்டும்.

أَشْهَدُ أَنْ لآ إِلٰهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ

*பொருள்: அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும் அவன் தனித்தவன் அவனுக்கு இணை யாருமில்லை என்றும் நான் சாட்சி கூறுகிறேன். மேலும், முஹம்மத் ﷺ அவர்கள் அவனுடைய அடியானாகவும் அவனுடைய தூதருமாயிருக்கின்றார் என்றும் சாட்சி கூறுகிறேன்.*

எவர் ஒருவர் இந்த துஆவை ஓதுவாரோ அவருக்காக சுவர்கக்த்தின் எட்டு வாயில்களும் திறக்கப்பட்டுவிடும், அவர் எதன் வழியாக உள்ளே பிரவேசிக்க விரும்பினாலும் பிரவேசிக்கலாம் (முஸ்லிம்).

அதன்பின் இந்த துஆவை ஓதவேண்டும்:

أَللّٰهُمَّ اجْعَلْنِي مِنَ التَّوَّابِينَ وَاجْعَلْنِي مِنَ الْمُتَطَهِّرِينَ

*பொருள்: அல்லாஹ்வே, என்னை உன்னிடம் பாவமன்னிப்புக் கோருபவான ஆக்கிவை மேலும், என்னைத் தூய்மையைக் கடைபிடிப்பவனாகவும் ஆக்கிவைப்பாயாக.* (திர்மிதி).

அதன்பின் கீழ்க்காணும் துஆவை ஓதவேண்டும்.

سُبْحَانَكَ اللهُ مَّ وَبِحَمْدِكَ، أَشْهَدُ أَنْ لآ إِلٰهَ إِلاَّ أَنْتَ، أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

*பொருள்: அல்லாஹ்வே, நீ பரிசுத்தமானவன், புகழ் அனைத்தும் உனக்கே உரியது, உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன், நான் உன்னிடம் பாவமன்னிப்புக்கோருகிறேன் மேலும், உன் புறமாகவே திரும்பியும் வருகின்றேன்.*

* * *

www.uzairfalahi.com